**சீத்தாவக்கபுர நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீத்தாவக்கபுர நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீத்தாவக்கபுர நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பிரிவுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1.2.3 (ஆ) | விளம்பர அறிவித்தல் கட்டண நிலுவை தொகையான ரூபா 23,299 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 1.2.3 | ரூபா 230,700 ஆன தனியார் பேரூந்து நிறுத்தற் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுக்கு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 9.9 ஆம் பிரிவின் பிரகாரம் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் உள்ள வரவுகளின் உருவாகாத அரசினால் கையளிக்கப்படும் உரித்து வேறாக கூறொன்றாக சொத்துக்கள் மற்றும் | தவறுதலாக விரிவான வருமானக் கூற்றில் 12 ஆம் குறிப்பில் அத்தொகை குறிப்பிடப்படாமையால் | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரியாக சமர்ப்பிக்கின்றேன். | |
| (ஆ) | 11.9 ஆம் பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க சொத்துக்களுக்கான நிதிஏற்பாடு தொடர்பாக காலப்பகுதி ஆரம்பத்தின் போதும் இறுதியின் போதும் முகப்பு பெறுமதி காலப்பகுதியில் சேர்த்தல் மற்றும் கழித்தல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பெறுமதி தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ்வாண்டில் இத்தகவல்கள் இனங்காணப்பட்டிருந்தத ால் ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பிக்க முடியாமல் இருந்ததுடன் ஒப்பீடுகள் அடுத்த ஆண்டிலிருந்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 15.13 ஆம் பிரிவின் பிரகாரம் நகர சபையின் பரிமாற்றப்படும் மற்றும் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களில் கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட முடியாது என பதிவழிக்கும் ஏதேனும் பெறுமதி மற்றும் அதற்கான அங்கீகாரம் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக ஆம் பிரிவின் பிரகாரம் 2155/6 மற்றும் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நகர சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக 227(iv) மூலமும் இது தொடர்பான குறிப்பிடப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கின்றேன். | நியமத்தின் பிரகாரமும் வர்த்தமானியின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட் ஆண்டிலேயே பெறுமானத்தேய்வு செய்யப்படாத போதும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 93,530 ஆன கணனிகளுக்காக பெறுமானத்தேய்வு ரூபா 14,030 தொகையும் குழந்தை பேரு சிகிச்சை நிலைய கட்டிடத்தின் பெறுமதி ரூபா 10,235,000 தொகைக்காக பெறுமானத்தேய்வாக ரூபா 255,875 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021.12.31. இல் உள்ளவாறு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நியமங்களின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 3,397,581 பெறுமதியான 14 இயந்திரங்கள் பெறுமதி இனங்காண முடியாத 16 CCTV கமராக்கல் மற்றும் உதிரிபாகங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து கிடைத்த பெறுமதி இனங்காண முடியாத LED அறிவித்தல் பதாதையின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 இல் உள்ளவாறு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் பெறுமானத் தேய்வு பெறுமதியான ரூபா 25,705,745 மற்றும் மிகை அல்லது பற்றாக்குறையாக இனங் காணப்படாத மூலதனச் செலவினம் ரூபா 7,244,281 உள்ளடக்கப்படாமை அந்த அளவினால் ஆண்டின் செயற்பாட்டு செலவினங்களில் காசுப் பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021.12.31 இல் உள்ளவாறு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது வரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் செலவினமல்லாத செலவினத்திற்காக அரசிடமிருந்து மாற்றல்களாக ரூபா 3,506,652 கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 35,066,521 கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனங் காணப்படாத மூலதன மானியமாக ரூபா 31,559,869 கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 7,244,281 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா 31,559,869 ஆல் கூடுதலாகவும் உரித்து ரூபா 24,315,588 ஆல் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட்ட உருப்படிகள் மாத்திரம் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | புதிய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள மற்றும் உபகரணங்கள் ரூபா 12,663,798 ஆன மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த துடன் மூலதனச் செலவினத்திற்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கீடு ரூபா 22,834,692 தொகை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். அடுத்த கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | புதிய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 47,942 தொகை ஊழியர் பிணை வைப்புக் கணக்கு மற்றும் நானாவித வைப்புக் கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டமையால் நானாவித வைப்புக் கணக்கு அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ | உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய ஒழுங்கைகள் மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றம் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 35,066,521 ஆன ஒழுங்கைகள் மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | இம்முழுத்தொகையும் ிலையான சொத்துக்கள் என்ற வரைவிலக்கணத்திற்கு உள்ளடக்கப்படாமையால் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | முன்னர் கிடைத்த கடை வாடகை ரூபா 101,243 நிலுவை கடை வாடகையிலிருந்து கழித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் சீராக்க நடவடிக்கை எடுப்பேன். | கடை வாடகை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் பெறுமதிக்கு இடையே ரூபா 8,631,773 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பேன் | கணக்குகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றிதழ் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ரூபா 15,493,207 பெறுமதியான கணக்கு விடயங்களுக்காக | 15,493,207 | பெறுமதி கணக்கிடப்பட்ட முறையைக் காண்பிக்கும் அட்டவணைவடிக்கை | சரியானதல்ல திருத்திய அறிக்கையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை | சரியான பெறுமதி கணக்கிடப்பட்ட முறை சமர்ப்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| தேவையான அட்டவணைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுப்பேன். | எடுப்பேன். | வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | தொடர்ந்தும் காணப்பட்டு வரும் தீர்வுசெய்யப்படாத முற்பண மீதியான ரூபா 492,046 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம்முற்பணத்திற்கான காணப்படும் பதிவேடுகளில் எதையும் கண்டுபிடிப்பதற்கு முடியாமையால் அதனை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 571(2) | வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 02 ஆண்டுகளை மிகைத்த உடன்படிக்கை பிணை வைப்புக்கள், நானாவித வைப்புக்கள் கேள்வி வைப்புக்கள் உட்பட ரூபா 35,558,106 ஆன பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்கள் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | இப்பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதியொன்றின் பொதுவான குத்தகை காலம் 05 ஆண்டுகளாக இருந்த போதும் சபைக்கு சொந்தமான 07 உத்தியோகபூர்வவிடுதிகளில் 24 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சபையின் | இந்த சகல விடயங்கள் தொடர்பாக அவர்களை அறிவூட்டுவதற்கு சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் இப்பிரச்சினை இது தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஊழியர்கள் குடியிருந்து வருவதுடன் இதற்காக தண்ட வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் இந்த உத்தியோகபூர்வ விடுதிகளில் அத்துமீறிய நிர்மாண மேற்கொண்டு வேலைகள் விபார செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டது. | வருகின்றது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,323,906 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,275,919 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 13,716,283 ஆக இருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது 04 நடமாடும் சேவைகளும் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடமாடும் சேவையொன்று நடாத்தப்பட்டு மக்கள் வீதவரி பணத்தை செலுத்துவதற்கு ஊக்குவித்து குறித்த நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடை வாடகை வருமான நிலுவை ரூபா 4,723,745 ஆக இருந்தது | இந் நிலுவையை அறவிடுவதற்காக எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாடிவீட்டு வாடகை<br>2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய வாடிவீட்டு வரி | நிலுவை தொகையை அறவிடுவதற்காக கடிதங்கள் மூலம் அறிவூட்டப்பட்டுள்ளது. | குறித்த நிலுவை தொகையை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,747,043 ஆக இருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தண்டப்பணம்<br>-------------------- | | |
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை தண்டப் பண வருமானம் ரூபா 465,807 ஆக இருந்தது. | அறவிடுவதற்காக உள்ள நிலுவை தண்டப்பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அறவிடப்பட வேண்டிய தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------------

பிளிப் குணவர்தண விளையாட்டரங்களின் ஓடுபாதை நிர்மாணம்

-----------------------------------------------------------------------------------------------

அவிஸ்ஸாவெல பிளிப் குணவர்தண விளையாட்டரங்கினைச் சுற்றி இன்டலொக் கற்கள் பிடித்து நடை வீதியொன்று நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 ஆன மதிப்பீடு ஒன்று மேற்கொண்டு கிராமிய முதியோர் சமூகத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 200,000 ஆன முற்பாணமொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கற்கள் பிடிக்கப்பட்டதன் பின்னர் அந்த நடை பாதை அமைப்பதற்கு பொருத்தமற்றதாக பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்திருந்தார்.

அது வரையில் ஓடுபாதையின் ஒரு பகுதிக்கு கற்ககள் பிடிக்கப்பட்டிருந்தது. பின்னர் சபையின் அறிவுறுத்திலின் பேரில் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டு ஓடுபாதையில் பிடிக்கப்பட்டிருந்த கற்கள் அகற்றப்பட்டு சபை வளவிற்கு எடுத்து வரப்பட்டிருந்ததுடன் அதுவரை ஒப்பந்தகாரரின் பெறுமதி ரூபா 305,979 ஆக இருந்தது. அது விளைவற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.